மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி குறிப்பு ஒன்றும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கலைக் கூடத்தில் பழைய கலை நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கலைக் கூடம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

டாக்ஸி டிரைவர் பேரில் வழக்குகள்

* 83 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வாடகை டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் சரியாக நடந்து கொள்ளாததால் புகார் பேரில் 1970-71-ல் எத்தனை டிரைவர்கள் பேரில் கேஸ் போடப்பட்டது?

(இ) அவர்களில் எத்தனை வாடகை டாக்ஸி டிரைவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

	1970	1971
(அ) சென்னை நகரில் உள்ள டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் முறையாக நடந்து கொள்ளாதது, வாடகைக்கு ஓட்ட மறுப்பு, இன்னும் அதிகப்படியான கட்டணங்களை கேட்டல் போன்ற புகார்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள் மொத்தம்.	429	392
(இ) அவற்றுள் அபராதம் விதிக்கப்பட்ட தேர்வுகளின் எண்ணிக்கை.	411	372

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, டாக்ஸி டிரைவர்களில் எல்லோரும் என்று சொல்வதற்கில்லை, சில பேர்கள் பிரயாணிகளிடம் தகாத முறையில் நடந்துகொள்கிறார்கள். கணக்கைப் பார்த்தால் கூட, அதற்காக போடப்பட்ட வழக்கு அதிகமாகிக்கொண்டு வருகிறது. அவர்களை கட்டுப் படுத்தி, மேலும் அவர்கள் பிரயாணிகளிடம் ஒழுங்கான முறையில் நடந்து

[1972 ஆகஸ்ட் 11]

கொள்வதற்கு வழக்குத் தொடர்வது என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும், ஒழுக்க முறையில் கல்வி அடிப்படையில் அவர்களுக்கு ஒழுக்க முறையை கற்பித்து, பிறகு லைசென்ஸ் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்குகள் அதிகரித்து வருவதாகச் சொன்னார்கள். 1970-ல் 429 வழக்குகளாக இருந்தது, 1971-ல் 392 வழக்குகளாக குறைந்திருக்கிறது. ஆகவே, வழக்குகள் குறைந்துவருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைக் கருத்தில் கொண்டு டாக்ஸி டிரைவர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்று அதற்காக அந்த சங்கங்களில் இருப்பவர்கள் முழு ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Smoke emitted by buses

*** 84 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR :** Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the police in Madras City have apprehended Government Transport buses in their drive to check the emission of smoke; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) புகையை வெளியிட்டவாறே சென்றதாக அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த 18 வண்டிகளை 26—9—1971-ல் காவல் துறை கைப்பற்றி 4—10—1971-ல் எழுத்து மூலமான அறிக்கையொன்றை அனுப்பியது.

திரு. ஏ. க. துரைசாமி : தலைவரவர்களே, இப்போதெல்லாம் அரசாங்கப் பஸ்களிலிருந்து வரும் புகை குறைந்து தனியார் பஸ்களிலிருந்தும் லாரிகளிலிருந்தும் வரும் புகை அதிகமாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா ? இது பற்றி அரசாங்கத்தால், நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்க பஸ்களானாலும் தனியார் பஸ் அல்லது லாரிகளானாலும் ஏராளமான புகையைக் கக்கிக்கொண்டு வரும்போது அது உடல் நலத்திற்கு உகந்தது அல்ல என்று பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதற்கு நான் முதலில் சொன்ன பதிலே ஒரு எடுத்துக்காட்டு என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.